**செய்தி வெளியீடு எண்:363** **நாள்: 24.02.2024**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார், மாண்புமிகு தேர்தல் ஆணையர், திரு. அருண் கோயல் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் பிற உயர் அதிகாரிகளுடன் 2024 ஆம் ஆண்டு மக்களவை பொதுத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாட்டில் இரண்டு நாட்களுக்கு சென்னையில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் இரண்டாம் நாள் கூட்டம் (24.02.2024) தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளா மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில காவல் ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான கூட்டமும், மத்திய மற்றும் மாநில செயலாக்கத்துறை அலுவலர்களுடனான தேர்தல் செலவின கண்காணிப்பு குறித்த கூட்டமும் நடைபெற்றது. மேலும், தமிழ்நாட்டின் அரசு தலைமை செயலாளர், காவல் துறை தலைவர் மற்றும் தேர்தல் பணியுடன் தொடர்புடைய அனைத்து துறை செயலாளர்களுடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை 03.00 மணியளவில் பத்திரிக்கையாளர் சந்திப்பும் நடைபெற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in